Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/300 of 1953.

விரோதிஞு (1889) ஆவணிமீ 28உ ஆரம்பமானது

# இந்து சாதனம்

சிவமயம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எச] யாழ்ப்பாணம்:- பிலவ ஞு பங்குனிமீ உசஉ வெள்ளிக்கிழமை (6 April. 1962) [இல-க]

உலகியல் அலை

# ஒற்றுமையால் உருவான பதவி

## சற்று நோத்தின் பின் அற்றுவிடும் ஆச்சரியம்

யாழ் நகர பெரும்பிதாவை ஒற்றுமையாய்த் தெரிந்து பதவியில் வைத்தார்கள் நகரபிதாக்கள். இது நடந்து நாட்கள் பலவாகவில்லை.

இப்பொழுது அந்த ஒற்றுமை முற்றுங் குலைந்து வேற்றுமையாய் விளைந்துவிட்டது. அதன் பயன் நம்பிக்கையில்லை என்ற பழைய பரபரப்பும் — புதிய பெரும் பிதாத் தெரிவும்,

சுட்ட மண்ணும் பச்சை மண்ணும் ஒட்டுமா, அதுபோல நகரபிதாக்கள் நாலாபக்கங்களை நோக்கும் கட்சிகளுக் குரியவர்கள். சந்தர்ப்பம் நோக்கிச் சற்று ஒற்றுமைப்பட்டால் அது பயன்படாது. இந்த அநுபவம் — முன் பன்முறை காணப்பட்டது. இருந்தும் பெரும் பிதாவைத் தெரியும் வகையில் வேளைக்குத்தக்க விதமாக விபரீத கூட்டுறவுக் குழுக்கள் எழும்புகின்றனவே, இதற்காகவே நாம் பல முறைகளிலும் நகர பெரும் பிதாவை நகர மக்களே தெரிவு செய்தல் வேண்டுமென்று புத்திமதி கூறினேம். மூன்றாண்டுக் காலத்துக்குள் மூப்பத்திரண்டு பிளவுகள் தோற்றின் முன்னேற்றம் எங்கே? தடுமாற்றமும் ஏமாற்றமுமே அன்றி நகரமும் நகர மக்களும் மிகவும் அல்லற்படுகின்ற நிலைமையும் காணப்படுவது கவலைக்கிடமானதாகும்.

—

## இளம் எழுத்தாளர் சங்க ஆண்டுவிழா

யாழ் - இளம் எழுத்தாளர் சங்கத்தின் ஓராண்டு நிறைவுகுறித்து மே மாதம் ஆண்டுவிழா நடை பெற இருக்கிறது. ஆண்டு விழாவில் பல தமிழ் அறிஞர்களும் ஈழத்துப் பிரபலஎழுத்தாளர்களும் இந்தியபிரபல எழுத்தாளர்களும் உரை நிகழ்த்துவர்.

அத்துடன் இளம் எழுத்தாளர்களிடையே மேற்படி சங்கத்திஞல் நடாத்தப் பெற்றபோட்டிகளில் பரிசு பெற்ற எழுத்தாளர்களின் புகைப்படங்களும் சிறுகதைப் போட்டி தவிர்ந்த ஏனைய கவிதை கட்டுரை நாடகப்போட்டிகளில் பரிசு பெற்ற படைப்புக்களும், ஏனைய இளம் எழுத்தாளர்களின் சிறந்த படைப்புகளும் இடம் பெறும் ஆண்டு விழா மலரும் ஆண்டு விழாவில் வெளியிடப்படும் என்று தெரிய வருகிறது. ——

## நற் சிந்தனை

அன்புடை யோர்பா
லறமெல்லா முண்டாகு
மின்ப மவர்க்
கென்றென் றிசை.

உ

கொத்தலர் குழலியோடும் விசையற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமும் மதியுநாகம் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனல்
புத்தரொடு அமணைவாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகுநல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

## மாணவர்களுக்குச் சைவசமயபாடப்போதனை

அகில இலங்கைச் சைவப் புலவர் பட்டதாரிகள் சங்கம் எதிர்வரும் சித்திரை விடுமுறை நாட்களில் பிறமதக் கல்லூரிகளில் பயிலும் பொதுத் தராதரப்பத்திரப் (S. S. C) வகுப்பு, சைவ மாணவர்களுக்குச் சமய பாடப் போதனையை நடாத்தத் தீர்மானித்துள்ளது இவ்வாண்டில் சமயபாடம் கட்டாய பாடமாக்கப்பட்டிருத்தலால் மாணவர் பூரண சமய அறிவைப் பெறவேண்டியவர்களாக இருக்கின்றனர். ஆதலின் பிறமதச்சூழலில் பயின்ற நம் சைவமாணவர்களின் நலம் கருதி சங்கம் இப்பணியை மேற்கொண்டுள்ளது. சங்கம் செயலாற்ற இருக்கும் இருபத்தொரு அம்சத் திட்டங்களில் தற்போதய சூழ்நிலையில் இப்பணி மிக அவசியமெனவும் கருதுகிறது.

சைவ மாணவர் பூரண சமய அறிவைப் பெறுவதும், பரீட்சையில் தேறுவதும் இன்றியமையாதன என்று சங்கம் கருதி இவ்வாக்கப் பணியை மிக விரைவில் நடாத்த முன்வந்துள்ளது. இச்சமயபாடப் போதனை யாழ்ப்பாணத்திலுள்ள நாவலா வித்தியாசாலையை நிலைக்களனகக் கொண்டே நடாத்தப்படவிருக்கிறது. இதனைத் தொடர்ந்து இவ்வாண்டுப் பரீட்சைக்குரிய சமயப் பட்டதாரி வகுப்புக்களும் வழமை போல் நடாத்தப்படும்,

அரசாங்கம் சமயக்கல்விக்கு முக்கியத்துவம் அளித்தமைக்குச் சங்கம் பெரிதும் நன்றி பாராட்டுகின்றது. கல்வியின் பயன் சமய வாழ்வில் மலருவதற்குச் செயலாற்றும் எமது சங்கத்திற்கு ஆக்கமும், ஊக்கமும் அளிக்குமாறு சைவப் பெருமக்களை வினயமாக வேண்டுகின்றோம்.

## சிசுமாதா பராபரிப்பு நிலையம்

குரும்பசிட்டியில் இருக்கும் மயிலிட்டி மத்திய வைத்திய சாலையில் 19-3-62 தொடக்கம் 'சிசுமாதா பராபரிப்புநிலையம்' ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது சிறப்பாக நடைபெறுவதற்கு தெல்லிப்பளை M. O. H. அவர்கள் கேட்டுக்கொண்டபடி சிசுமாதா பராபரிப்பு நிலையத்துக்கு அவசியம் தேவையான சில பொருட்களை குரும்பசிட்டி சன்மார்க்கசபை 1-4-62ல் கொடுத்துஉதவியுள்ளது. குழந்தைகளையும் கர்ப்பனித் தாய்மார்களையும் ஒவ்வொரு திங்கட்கிழமைகளிலும் பரிசோதனைசெய்து மருந்துகள் வழங்கப்படுகிறது.

——

## 'சிவாத்துவிதம்'

[அணிமையில் மறைந்த கலைப்புலவர் எழுதிய இந்த இறுதிக்கட்டுரை அவரால் மனமுவந்து இந்துசாதனத்திற்கு அளிக்கப்பட்டது. இக்கட்டுரையின் ஐந்தாம் பகுதி சென்ற வாரம் வெளிவந்தது. மிகுதி இங்கே தரப்படுகின்றது]

(முற்றொடர் 6)

சிவாத்துவிதமும் சைவசித்தாந்தமும் ஒன்றெனக் கொள்ளுதலும், அல்லது சிவாத்துவிதம் சைவசித்தாந்தத்திற்கு ஒரு பேராணுக விளங்குகின்றதெனக் கொள்ளுதலும், சித்தாந்த மரபுக்கு மாறுபட்ட கருத்தாகும். சிவாத்துவிதம் சைவ வேதாந்தம். அது சிவபரத்துவம். கூறுமளவிற்றான் சைவ சித்தாந்தத்துடன் ஒற்றுமையுடையது. பதி இலக்கணம், ஆன்ம இலக்கணம், உலக பரிணமம், முத்திநிலை ஆகியனவற்றில் சைவ சித்தாந்தத்துக்கு மாறுபட்ட கருத்துடையதாகும்.

"சைவவேதாந்தம்" எனக் கூறும்போது, சைவத்துடன் வேதாந்தத்தைச் சேர்க்கலாமாவெனச் சிலர் கேட்கலாம். சமயம் வேறு தத்துவ ஞானம் வேறு என்பதை விளங்கிக்கொண்டால் இக்கேள்விக்கு இடமிராது. இறைவனை அல்லது பரிபூரண நிலையை அடைவதற்கு ஒருவன் செய்யும் முயற்சியே மார்க்கம் அல்லது சமயம் எனப்படும். சாதனைகளால் அமைக்கப்பட்டது சமயம். இறைவனுக்கும், உலகத்திற்குமுள்ள தொடர்பையும், சமய சாதனைகளுக்கு ஆதாரமாயுள்ள தத்துவங்களையும் விளக்கும் அறிவியற்றுறையே தத்துவ ஞானம் எனப்படும். சைவம், வைணவம், சாக்தம் முதலியன சமயங்கள். அத்துவிதம், விசிட்டாத்துவிதம், சிவாத்துவிதம், பேதாபேதம், சுத்தாத்துவித சைவ சித்தாந்தம் என்பன தத்துவஞானங்கள். சைவசமயத்தைத் தத்துவ ஞானரீதியில் பிரிக்கும்போது அது சிவ-விசிட்டாத்வைதம் அல்லது சிவாத்துவிதம், சுத்தாத்துவ சைவ சித்தாந்தம், விசேஷாத்துவிதம், அல்லது துவைதாத்துவிதம், பிரதியா பிக்ஞ தரிசனம் எனப் பிரியும்.

சைவர்களுள்ளும் வைணவர்களுள்ளும், அத்வைதிகளும், விசிட்டாத்வைதிகளும் இருக்கலாம், 'வேதாந்த சித்தாந்த நன்னிலை என

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

கலைப்புலவர்,
திரு. க. நவரத்தினம்

## வஞ்சப் பிணிகள் தீரும்

*

"அளவையூர் - சஞ்சீவி"

இராகம்: லதாங்கி, தாளம்: ஆதி.

பல்லவி

சஞ்சல மிருக்காது — மனமே
சரவண பவனிரு சரணமி ருக்கும்போது (சஞ்)

அநுபல்லவி

அஞ்சலி புரிந்தே அன்புகொள் மனத்தால்
அனுதினம் முருகனை அழைத்து நினைத்தால் (சஞ்)

சரணம்

வஞ்சப் பிணிகள் எல்லாம் வடிவேலி ஞலேதீரும்
மாயமலங்கள்எல்லாம் மயிலைக்கண் டாலேசோரும்
அஞ்சிடும் வேளையிலே அறுமுகம் வந்துசேரும்
அந்திய காலத்திலும் ஆனந்தம் தானேநேரும் (சஞ்)

## பம்பாய் தமிழ்ச்சங்கத்தில் கல்கி

தமிழ் சரித்திர நாவல் துறையில் தன்னிகரற்று விளங்கிய கவியுள்ளம் படைத்த பிரபல எழுத்தாளர் கல்கி இரா. கிருஷ்ணமூர்த்தியின் உருவப்படம் பம்பாய் தமிழ்ச்சங்கத்தில் திரைநீக்கம் செய்துவைக்கப்படும்.

## கமர்ஷீல்டின் மரணம்

கொங்கோ கடாங்கா கலகக் காலத்தில் விமானவிபத்தில் சிக்கி மரணமான முன்னைநாள் ஐ. நா. சபைப் பொதுக்காரியதரிசி கமர்ஷீல்டின் மரண விசாரணைக்கென ஐ. நா. சபையின் குழுவினரின் அமைக்கப்பெற்ற அறிக்கை விரைவில் வெளியிடப்படுமென அறியவருகிறது. ——

# சம்ஸ்கிருதசங்கப் பரிசளிப்புவிழா

"சம்ஸ்கிருதமொழியானது, நாடு — இன — மொழி வேறுபாடுகளின்றி எல்லாராலும் கற்கப்பட்டு வருகின்றதாயினும் அது, இந்துமதத்தவர்க்கு மிக மிக அவசியமானதும் உரிமையுடையதுமான மொழியாகும். சைவ மக்களுடைய கோயிற்கிரியைகளும் வீட்டுக் கிரியைகளும் எல்லாம் வடமொழியின் அடிப்படையிலேயே நிகழுவன. சைவ சமயத்தவர் தங்கள் கிரியைகளின் நோக்கத்தை நன்கு உணர்வதற்கும், மந்திரங்களின் பொருளையறிவதற்கும் இயன்றளவு சம்ஸ்கிருத அறிவு பெறுவது அவசியமாகும். இப்படியிருப்பினும் சம்ஸ்கிருதம் பூசை வழிபாடுகளுக்கு மாத்திரம் உரிய பாஷையல்ல. அம்மொழியிலுள்ள ஈடு இணையற்ற இலக்கியச் செல்வங்கள் பல்வேறு மொழிகளின் இலக்கியங்களுக்கும் வழிகாட்டியாயிருக்கின்றன. இத்தகைய மொழியை இந்நாட்டில் நன்கு பரப்புவதற்கு சம்ஸ்கிருத விஸ்வ பரிசத்தின் கிளைகளாகிய புத்தூர்க கோதிரமும், வட இலங்கைச் சமஸ்கிருத சங்கமும் முயன்று வருவது பாராட்டப்பட வேண்டியதாகும்" என்று வியாகரண சிரோமணி தி கி. சீதாராம சாஸ்திரிகள் சென்ற ஞாயிற்றுக்கிழமை மாலை வண்ணை நாவலர் வித்தியாசாலையில் நடந்த சம்ஸ்கிருத சங்கப் பரிசளிப்பு விழாவுக்குத் தலைமை தாங்கிப் பேசும்போது குறிப்பிட்டார்கள். பம்பாய் பாரதீய வித்யா பவனத்தினால் சென்ற ஆண்டில் இங்கு இருமுறை நடாத்தப்பட்ட சம்ஸ்கிருதப் பரீட்சைகளில் தேறியவர்களுக்குத் தகுதிப் பத்திரங்களும, முதலாம இரண்டாம் இடம் பெற்றவர்களுக்குப் பரிசில்களும வழங்குவதற்காக மேற்படி கூட்டம் நிகழ்ந்தது.

தலைவர் முன்னுரையின் பின்னர், வட இலங்கைச் சம்ஸ்கிருத சங்கத்தின் காரியதரிசியான பிரமஸ்ரீ. கு. பாலசுந்தரக்குருக்களால் வருடாந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. பண்டிதர் தி. விஸ்வநாதக்குருக்களவர்கள் பேசும்போது சங்ககாலந்தொட்டுச் சமீபகாலம் வரையில் எழுந்த வடமொழி இலக்கியங்களுக்கும் தமிழ்மொழி இலக்கியங்களுக்குமிடையிலே காணப்படும் கருத்தொற்றுமை, வருணனை ஒற்றுமை, அலங்கார ஒற்றுமைகளைப் பலப்பல எடுத்துக்காட்டுகள் மூலம் விளக்கி இருமொழியினையும் இருகண்ணாப் போற்றிப் பலனடைய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள்.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக்கல்லூரி உபஅதிபரான திரு. வி. சிவசுப்பிரமணியம் அவர்களால் தகுதிப்பத்திரங்களும் பரிசில்களும் வழங்கப்பட்டன. வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி, யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயக்கல்லூரி, சுன்னாகம் இராமநாதன் கல்லூரி, கரவெட்டி வாணி[illegible]கழகம் என்பவற்றிற்கல்விகற்ற பத்து மாணவ மாணவிகள் முதலாம் இரண்டாம் பரிசில்களைப் பெற்றனர், நியாய சிரோமணி கி. சுப்பிரமணியன் அவர்கள் வடமொழியின் ஒலிச்சிறப்பை உதாரணமூலம் விளக்கிப் பேசினார்கள்.

சம்ஸ்கிருத நிகழ்ச்சிகள் சில மாணவரால் நிகழ்[illegible]பட்டன. பின்பு நடந்த நிர்வாகிகள் தேர்வில் சிரோமணி தி. கி. சீதாராமசாஸ்திரியவர்கள் தலைவராகவும், பிரமஸ்ரீ. கு பாலசுந்தரக் குருக்களவர்கள் காரியதரிசியாகவும், பண்டிதர் ச ப. சர்மா பரீட்சைக் காரியதரிசியாகவும், திரு. ஷண்முக குமரேசனவர்கள் தனாதிகாரியாயும் ஏகமனதாகத் தெ[illegible] செய்யப்பட்டனர்.

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

## இந்துசாதனம்

பிலவ ஞூ பங்குனி மீ
உசஉ வெள்ளிக்கிழமை

## விளையாட்டு வினையாய் விளைதல்

மூட்டிப்பலச்சாதனைவீரரொருவர் (Boxer) அவ்விளையாட்டில் வீரங் காட்டும்போது உற்ற காயங்களினால் உயிர்துறந்தார்என்று அறிகின்றோம். சில நாட்களுக்கு முன் இந்தியக்குழுவினருக்கும் மேற்கு இந்திய தீவுக் குழுவினருக்கும் நடைபெற்ற இன்னொரு விளையாட்டில் இந்திய வீரர் பேராபத்துக்குள்ளானார் என்றும் (இப்பொழுது குணமடைந்து வருகின்றார்) செய்தி வெளி வந்தது. இவ்வாறு விளையாட்டுத் திறமைத் தேர்வுகளில் விபத்துக்கிடமிருப்பதை உற்று நோக்கும்பொழுது வீரத்தின் கூர்மை வினையாய் விளைவதைத் தடுக்க வழி இல்லையா என்று ஆராய வேண்டிய கடமை ஒன்று மக்களுக்குண்டு என்பது நன்கு புலப்படும்.

எருத்துச் சண்டை விளையாட்டு மேற்கு நாடுகளில் இப்பொழுதும் உண்டு. ஆங்கு ஆபத்து எப்பொழுதும் எதிர்பார்த்தபடியே இருக்கும். வண்டி வேக ஓட்டத்திலும் இவ்வாறே. இவற்றிலிருந்து முதலாவதாகத்தோன்றும் உண்மை ஒன்று இருக்கின்றது. வீரத்தில் வெற்றி பெறுவது விளையாட்டின் நோக்கமாக இருப்பினும் அதற்குரிய ஆர்வம் கட்டுப்பாட்டுக்குள் ளடங்க வேண்டும் என்பதே. எதற்கும் எல்லை ஒன்றுண்டு. அளவுக்கு மிஞ்சினல் அமுதமும் நஞ்சென்ற அமுத மொழியை விளையாட்டுவீரர்கள் நன்கு அறிந்துணருதல்வேண்டும்.

வயதுவந்த வீரர்களின் விளையாட்டுச் சாதனைகளைப் பின்பற்றிச் சின்னஞ் சிறுரும் பள்ளிக்கூடங்களிலோ வேறிடங்களிலோ அடங்கா ஆர்வம் பூண்டு ஆபத்துக்குள்ளாவதும் வழக்கமாய் விட்டது. காலத்தின் போக்குக்கமையக் கல்வித் துறையில் விளையாட்டு வீரத்துக்கும் பெரும் உரிமை எழுந்திருக்கின்றது. பள்ளிக்கூட மாணக்கர்கள் பங்குனிப் பகல் வெய்யில் வெப்பத்தையும் பொருட்படுத்தாது உடற்பயிற்சி விளையாட்டுத்தேர்வு போன்ற சிரமத்தில் ஈடுபடுகின்ற பரிதாபத்தைப் பெற்றோர் பலர் கண்டும் ஒன்றும் செய்ய இயலாதவர்களாய் விளைவதைப் பார்க்கும் பரிதாப நிலையிலிருக்கின்றனர். சூரிய வெப்பத்தின் சீரைக் கணித்து உரிய காலத்தில் உரிய விளையாட்டுக்கள் உடற்பயிற்சிகள் நடத்துவதே உகந்த முறையாகும். வீரத்தில் முதன்மை பெற விரும்புவோரும் அபாயம் ஆபத்து என்றவற்றை அறிந்து தங்கள் உணர்ச்சி வேகத்தை உரிய முறையிற் கட்டுப்படுத்துவதற்கு விதிகள் அமைக்கப் பெற வேண்டும். கல்வி நிலையத் தலைவர்களும் ஆசிரியர்கள் விளையாட்டுக் கழகங்களும அபிமானிகளும் விளையாட்டு வினையாய் விளையாது களியாட்டுக்கலையாய் எல்லோருக்கும் இன்பம் பயக்கும் பான்மையில் அமைவதற்கு உரிய பணி ஆற்றுவார்களாக.

இவ்வாரம் (8-4-62 — 14-4-62)

## உங்கள் பலன்?

[ ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது ]

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

இவ்வாரம்செலவுகள்பெருகும். ஆனல்அதற்குப்போதியவருவாய் பெறுவீர். மூத்தஉடன்பிறப்புகள் மிகஉதவுவர். உடல்நிலை மேலும் திருப்தியற்றதாகவே இருக்கும்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

உமது தொழில் துறையிலும் சொந்த விவகாரங்களிலும் சில முன்னேற்றம் ஏற்படும். புதிய முயற்சிகள் தடங்கல்படும். ஆனல் வெற்றிபெறும். தந்தைவழி உறவினர் உமக்குத் தொல்லை தருவார்கள்,

**மிதுனராசி** மிருகசீரிடம், 2 4,3, திருவாதிரை, புனர்பூசம் 1, 3 4ம் பாதம்.

குடும்ப விவகாரங்களில் சில முன்னேற்றங்கள் ஏற்படும். தொழில் வெற்றியும் பணஇலாபமும் நிச்சயம். ஆனல் மனநிம்மதி இருக்காது.

**கடகராசி** புநர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்.

குடும்ப நிலைகள் தொடர்ந்து குழம்பியே இருக்கும். உம்முடைய பொறுப்புகளில் அதிகம் முன்னேற்றம்காணமுடியாது. செலவுகள் அதிகமாகும்.

**சிங்கராசி** மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

தடைகளைத் தாண்டிவிட உம்மால் முடியும். பணமளவில்நல்ல வாரம், ஆனல உடல்நிலை பாதிக்கப்படும்.

**கன்னிராசி** உத்தரம் 2, 3 4 பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

குடும்ப விஷயங்கள் திரும்பவும் பாதகமானவையாய் மாறலாம் உடல் நிலையும் பாதிக்கப்படும். உமது ஈடுபாடுகளில் மிக எச்சரிக்கையோடு நடந்துகொள்க

**துலாம்,** சித்திரை 3 4ம் பதாம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

தாய்வழிஉறவினர்கள் உம்மைச் சங்கடப்படுத்துவர். தாயாரின் உடல்நிலையும் முதலிருநாட்களுக்குப் பாதிக்கப்பட்டிருக்கும். வாரமிகுதிப்பகுதி புதிய ஈடுபாடுகளுக்கு ஏற்றது, உம்மால் மிக எளிதாக எதிரிகளை வாகை கொள்ள முடியும்,

**விருட்சிகராசி** விசாகம் 4ம் பாதம் அநுஷம், கேட்டை.

உடல்நிலைபாதிக்கப்படும்வயிற்றுக்கோளாறுகள்ஏற்படும். குடும்பக் கலகமும் மனஅமைதியினமும் ஏற்படும். அயலவரும் அந்நியரும் மிக உதவியாக இருப்பர். திங்கள் மாலையையும் செவ்வாய் புதனையும்எச்சரிக்கையோடு கழிக்கவும்,

**தனுராசி** மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

கிழமையின்முற்பகுதிவியாபார ஈடுபாடுகளுக்கு ஏற்றது. வேலை அதிகமாகஇருக்கும். வியாழன் வெள்ளி சனியை எச்சரிக்கையோடு கழிக்கவும்.

**மகராசி** உததராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டப் 1, 2ம் பாதம்,

பணமளவில் நல்லவாரம், புதிய முயற்சிகள் வெற்றிகரமாயிருக்கும். ஆனல்மனநிம்மதிஇருக்காது தம்பி தங்கைகள் மிக உதவியாக இருப்பர். சனி மாலையை எச்சரிக்கையோடு கழிக்கவும்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

கண்நோய்களுக்கு இடமுண்டு நண்பர்களுடன் கலகங்களும் தவறான விளக்கங்களும் ஏற்படும். ஆனல் உம்முடன் போட்டியிடுவோரை உம்மால்வெற்றிகொள்ள முடியும்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி

உமது சொந்த விவகாரங்கள் குழம்பலாகஇருக்கும். பொறுமை இழப்பதில் முந்திநிற்பீர், உடல் நிலைக்குழப்பங்களும் ஏற்படும். ஆனல் பணமளவில் நல்லவாரம்.

## அகத்தியர் சித்த வைத்தியர் சங்கம்

நவாலியூர் நாச்சிமார் கோயில் மண்டபத்திலே கடந்த திங்கட் கிழமை (2-4-62) மாலை 7 மணியளவில் சித்த வைத்தியர் செ. சரவணமுத்துவின் அகத்தியர் சித்தவைத்திய சங்கக்கூட்டம் முதலியார் வை. மகேசன் J.P அவர்களின் தலைமையிற் கூடிற்று.

சித்த வைத்தியத்தின் சிறப்புக்களையெல்லாம் எடுத்துத் தலைவர் உரைத்தபின்னர் உத்தியோகத்தர் தெரிவு நடைபெற்றது

பாதுகாவலர்: கேற் முதலியார் சி, தியாகராசா, தலைவர். ப இராசகுலசிங்கம், உப தலைவர்கள்: வைத்தியர் செ. சரவணமுத்து, வைத்தியர் ச, குமாரகுலசிங்கம், காரியதரிசி: சி கதிரவேலு, தனாதிகாரி: த. சிவகுரு. அறுவரைக் கொண்ட நிருவாகசபையும் அமைக்கப்பட்டது.

எதிர்வரும் 12-4-62 இல் இந்துசாதனம் புத்தாண்டு மலராக வெளிவர இருக்கிறது. அறிஞர்களும், கவிஞர்களும தமது படைப்புக்களை விரைவில் அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

## உருப்பராய் சிதம்பர சுப்பிரமணியசுவாமி கோவில்

சரித்திரப் பிரசித்தி பெற்ற உரும்பராய் சிதம்பர சுப்பிரமணிய சுவாமிகோயில் ஒல்லாந்தர்காலத்தில் இடிபட்டது. அதன் பின்பு இடிந்த நிலையிலேயே இக்கோயில் கிடந்தது. 1953ம் ஆண்டு புனருத்தாரண வேலை தொடங்கப்படடு 1958ம் ஆண்டு கும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நிறைவேறியது. அக்காலத்தில் கடமையாற்றிவந்த சைவப் பெரியார் திரு இ சின்னத்துரை மாரடைப்பினால் மறைந்துபோக, பொருளாளன் என்ற பொறுப்பைத் திரு. செ. சிவலிங்கம் என்பவரிடம் உருப்பராய் மக்கள் ஒப்படைத்துள்ளார்கள். இக்கோயிலில் சில ஆண்டுகளாக அன்னதானம் முதலாய கைங்கரியங்கள் வெகு சிறப்பாக நடைபெறுகின்றன. எதிரே வரும் 8-4-62 ஞாயிற்றுக் கிழமை மகாசங்காபிஷேகமும் 300 பேருக்கு அன்னதானமும் நிகழ ஏற்பாடாகியிருக்கிறது.

## காசியிற் பிள்ளையார் கோவில் சங்காபிஷேகம்

எதிர்வரும் 26உ (8-4-62) ஞாயிற்றுக்கிழமைதெல்லிப்பழை காசியிற்பிள்ளையாருக்குவருடாந்த சங்காபிஷேகமும் விசேட நிகழ்ச்சிகளும் திருவிழாவும்நடைபெறும்.

## அரிய படைப்புக்களை அளிப்பித்த ஈழகேசரி பொன்னையா

மகாவித்துவான் கணேசையர் கலைப்புலவர் போன்றோரின் தொல்காப்பியம், தென்னிந்திய சிற்ப வடிவங்கள் போன்ற நூல்களை வெளியிட்ட பெருமை ஈழகேசரி பொன்னையா அவர்களையே சாருமென்றும் தகுதியானவர்களைக்கண்டுபிடித்து அவர்களை ஊக்குவித்து அவர்களால் நம் நாடு பெறவேண்டிய அரிய பொக்கிஷங்களைப் பெற்றுக் கொடுத்தவர் பொன்னையா அவர்களே என்றும் குமாரசுவாமிப் புலவரது மகனும் ஈழகேசரிப் பத்திரிகையோடு நெருங்கிய தொடர்புகொண்டு உழைத்தவருமாகிய திரு. கு. அப்பலவாணபிள்ளை அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து, அண்மையில் குரும்பசிட்டி சன்மார்க்க சபையில் நடைபெற்ற ஈழகேசரிபொன்னையா நினைவுநாள் விழாவில் பேசும்போது குறிப்பிட்டார்கள்.

இவ்விழாவில் பிரபல விமர்சகரும் எழுத்தாளருமாகிய ஆசிரியர் கனக, செந்திநாதன் அவர்கள் "அரசியல் - சமூகம் மொழி ஆகிய பல துறைகளிலும் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி இந் நாட்டை மேனிலை அடையச் செய்ய வேண்டுமென்ற பெருநோக்கோடு கால்நூற்றாண்டு காலமாக ஈழகேசரிப்பத்திரிகை மூலமாக அருந்தொண்டாற்றிய பொன்னையா அவர்களது மன உறுதியும் காலத்துக்கேற்ற தொண்டும் போற்றத்தக்கது" எனக்கூறினார்கள். சன்மார்க்க நாடக மன்றத் தலைவர் திரு. A. T. பொன்னுத்துரை B A, பேசுகையில் பொன்னையா அவர்கள் நாடகம், சங்கீதம், கலை கலாச்சாரம் என்பவற்றிற்காக எடுத்த முயற்சிகளைப் பாராட்டி அவர் வள்ளற்றன்மையை எடுத்துரைத்தார். சபைக்காரியதரிசி ஆசிரியர் த. இராசரத்தினம் அவர்கள் நன்றிகூறினார்கள். அதன் பின் பூசை, பிரார்த்தனை என்பன நடைபெற்ற பின் மகேசுவரபூசை (மத்தியான உணவு) பெருமளவில் நடைபெற்றது.

கனிஷ்ட பொதுத்தராதர வகுப்பு இலக்கியம்.

# அலையும் கலையும்

சுருக்கம்

## தமிழ்நாட்டுப் பட்டினங்கள்

( முற்றுடர் )

### 3. பாண்டிநாடு

### 3 தூத்துக்குடிப் பட்டினம்

வெள்ளைக்கார வணிகர்களுக்கு ஊதியந் தந்த தூத்துக்குடி 300 ஆண்டுகளாகச் சிறந்து விளங்கி வருகின்றது. 20 ம் நூற்றாண்டில் இங்கே தொடங்கிய இந்தியவிடுதலை இயக்கத்தைப் பாரதியாரும் சிதம்பரனாரும் வளர்த்தார்கள்.

தூத்துக்குடியிலே, பாரதியாரது சுதந்திரப் பாடற்கனலோடு சிதம்பரனாரின் பேச்சுப் புயலும் கலந்தது. அன்று கொற்கையிலே பாண்டியனது மீனக்கொடிபறக்க வாணிபத்தால் வளமுற்று வாழ்ந்த மக்கள், இன்று ஆங்கில நாட்டுக் கொடி பறக்கும் தூத்துக்குடியிலே அவர்க்கடிமை செய்து அவர்களது கப்பலில் கூலியாளராயிருந்து வயிறு வளர்ப்பது இழிவு எனச் சுட்டிப் பேசிய சிதம்பரனார் செயலிலும் ஈடுபட்டார்.

அவர் பாண்டித்துரைத் தேவரது தலைமையில் தூத்துக்குடியிலே சுதேசக் கப்பற் கம்பெனி ஒன்றை அ[illegible]தி, தாம் செயலாளராகக் க[illegible]மயாற்றிச் சுதேசக் கப்பல் வணிகத்தை விருத்தி

— பூசம் —

செய்தார். அதுகண்டு பொறாமையுற்ற வெள்ளையரது அரசாங்கம் "அரசியற் குழப்பஞ் செய்தார்" எனச் சிதம்பரனார்மீது குற்றஞ் சாட்டியது; அத் தேசபக்தருக்குச் சிறையும் அளித்தது.

சிதம்பரனார் சிறையிலே கருங்கல் உடைத்து, செக்கு இழுத்து வருந்தினார். ஆயினும் அவர் ஓய்வு நேரங்களில் தொல்காப்பியம் திருக்குறள் முதலிய செந்தமிழ் நூல்களை ஓதி மகிழ்ந்தமையும், நாட்டில் வீரவிடுதலை இயக்கம் விஞ்சி எழுவதற்கு ஏதுகண்டு உள்ளம் பூரித்தமையும் அவரது வாய்மொழியிலிருந்து அறியத்தக்கன.

பயிற்சி வினாக்கள்

1 ஔவையார் தமிழ்நாட்டுவளங்களை எங்ஙனம் சிறப்பித்துக்கூறினார்?
2, குமரகுருபர அடிகள் முத்து அகப்படும் இடங்களைப்பற்றிக் கூறும்பாடலின் பொருளை உமது வசனநடையில் தருக.
3. கொற்கைஎதனால்சிறப்புற்றது?
4. 'காயலை'ப்பற்றி மார்க்கோ போலோ யாது கூறுகின்றார்?
5. 'கால்டுவெல்' தமிழ்நாட்டுக்குச்செய்த தொண்டினை விளக்குக,
6. தூத்துக்குடியில் தோன்றிய விடுதலை இயக்கத்தைப்பற்றி நீர் அறிந்தவரை எழுதுக

## PARTITION SALE

பிரிவிடல் சட்டப்படி

## விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை
டிஸ்திறிக்கோட்டில்
வழக்கு இல. 6486.

1. பருத்தித்துறை செம்பகப்பிள்ளை கதிர்காமத்தம்பி
2, ஷையூர் செம்பகப்பிள்ளை நாகலிங்கம்
3 ஷையூர் குமாரசாமி பாலசுப்பிரமணியம்
4, பெண்கோணுந்தைப்பிள்ளை
—வழக்காளிகள்,

எதிராக

1. ஷையூர் ஏரம்பமூர்த்தி கைம்பெண பொன்மயிலாம்பிகை
2. நல்லூர் வடக்கு கந்தையா வயிரவநாதர்
3. பருத்தித்துறை வேலுப்பிள்ளை செல்லையா
4. யாழ்ப்பாணம் இல 384 நல்லூர் சந்தை V. கந்தையா மகள அன்னபூரணம்
5. V. கந்தையா மகள் அன்னலட்சுமி
6. V. கந்தையா மகள் நாகம்மா
7. V. கந்தையா மகன் செல்வரத்தினம்
8. கந்தையா அமிர்தலிங்கம்
9. V கந்தையா மகன் நாகரத்தினம்
10. கந்தையா தியாகலிங்கம்
11. கந்தையா யம்புலிங்கம்
12. V. கந்தையா கைம்பெண் தங்கம்மா

4-ம் எதிரி தொடக்கம் 11-ம் எதிரிவரையுமுள்ளவர்கள் பராயமற்றவர்கள். அவர்களின் பராமரிப்புக்காரி 12-ம் எதிரி.
—எதிரிகள்.

மேற்கூறிய இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் எனக்குக் கோட்டால் அனுப்பப்பட்ட கொமிஷன் அதிகாரப்படியும் 1962-ம் ஆண்டு வைகாசி மாசம் 5-ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் பின்னால் விபரிக்கப்படும் ஆதனமிடமாகநின்று முதலாவதாக பங்காளருக்கிடையிலும் அவர்கள் வாங்கத் தவறினால் உடனே அந்த இடத்திலேயே பிரசித்த ஏலத்திலும் விற்கப்படும்,

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி பருத்தித்துறைக் கோயிற்பற்று பருத்தித்துறை வென்றிபாகுதேவன் குறிச்சியிறையிலும், சிங்கபாகுதேவன் குறிச்சியிறையிலும் மழவராய குறிச்சி யிறையிலுமுள்ள 'நாவலடி" "மக்களுவோடை" "சந்தன்கலட்டி" உறுதிப்படி குளி 14 19/32. ஆனால் 1960-ம்ஆ மாசி மாதம் 28-ந் திகதி உலாந்தா மேஸ்தர் சி. சுப்பிரமணியத்தால் 842-ம் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்ட படத்தின்படி குளி 13 14/32 அதைச் சேர்ந்தவைகளும், எல்லை கிழக்கு வழக்காளிகளுக்கும் மற்[illegible] பேருக்குமுடைய வாதனம். வடக்கு கதிர்காமர் பெண் கதிராசிப்பிள்ளையின் உரிமைக்காரருக்குடையவாதனம். மேற்கு M இராமலிங்கத்துக்குடைய வாதனம். தெற்கு நல்லலிங்கம் பெண் பறுபதத்துக்குடைய வாதனமும் கையொழுங்கையும், இது முழுவதும்,

இவ்வாதனத்துக்குக் கோட்டால் அனுமதிக்கப்பட்ட விலை மதிப்பு ரூபா. 2500-00.

V M. KANDASAMY
Commissioner of sales
வல்வெட்டித்துறை,
1-4-62.
M 2 6-4-62.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வண்ணார்பண்ணை மேற்கு
சின்னத்தம்பி தியாகராசா
—வழக்காளி,
வழக்கு இல. M.B. 3509
எதிராக
வண்ணார்பண்ணை கிழக்கு
நாகமுத்து கைம்பெண்
அன்னப்பிள்ளை —எதிராளி,

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B. 3509-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைதத கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுகாணி 1962-ம் வருடம் வைகாசிமாதம் 5-ந் திகதி (5 - 5 - 62) சனிக்கிழமை காலை 10-30 மணி தொடககம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- ரூபா 1008/-ம், 15-7-60 தொடக்கம் 20 - 12 - 60 வரைக்கும் ரூபா 620/-க்கு 12 வீத வட்டியும், அதன்பின் முழுத் தீர்வைத் தொகைக்கும் பணம் முற்றாக இறுபடும்வரைக்கும் 5 வீதவட்டியும், கோட்டுச் செலவு ரூபா 137-49 சதமும்..

காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக், யாழ்ப்பாணப்பகுதி, வண்ணார்பண்ணை கோயிற்பற்று, வண்ணார்பண்ணை தென்கிழக்கு இறை, "பாணன்காடும், சிறும்பிகுளமும்" (Panankadu and Sirampikulam) நெற்பரப்பு 1 குளி 2 8/10, கணபதியார் செல்லையாவுக்குரிய 4-வது துண்டிலுள்ள கிணற்றில் பங்கும் - தூர்வை, ஆடுகால், மற்றைய உடைமைகளில் பங்கும் - வழிவாய்க்காலும் கிணற்றிலிருந்து போகவும் வரவும். எல்லை கிழக்கு கிணற்றுக்கு போகப் பாதையாகவுள்ள 5-வது துண்டு. வடக்கு பரமு கைம்பெண் சின்னம்மாவுக்குரிய ஆதனம் (2-வது துண்டு.) மேற்கு ரேட்டு. தெற்கு கணபதியார் செல்லையாவின் ஆதனம். (4-வது துண்டு) இதடங்கலும் அதன் உடைமைகளும்,

செ. பாண்டித்துரை,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
ஏலதாரர், தரகர்,
Commissioner of Sales, Valuer
Auctioneer & Broker.
மல்லாகம் 26-3-62,
M. 171 6-4-62.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

—0—

சில்லாலை
சுவாம்பிள்ளை அத்தனாசியார்
—வழக்காளி,
வழக்கு இல, M, B. 3581
எதிராக
பண்டத்தெருப்பு
1. நாகமுத்து வல்லிபுரம்
2 நாகமுத்து முருகேசு
—எதிராளிகள்,

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 3581-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிககப்படும் இருதுண்டுக் காணிகள் 1962-ம் வருடம் சித்திரை மாதம் 28-ந் திகதி (28 - 4 - 62) சனிக்கிழமை காலை 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிகட்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- ரூபா 1985-ம், 29-8-60 தொடககம் 22 - 11 - 60 வரைக்கும் ரூபா 1000-க்கு 12 வீத வட்டியும், அதன்பின் முழுத் தீர்வைத் தொகைக்கும் பணம் முற்றாக இறுபடும் வரைக்கும் 5 வீத வட்டியும், கோட்டுச்செலவு ரூபா 187-85 சதமும். இதில் ரூபா 1000/- கோட்டுமூலம் கட்டப்பட்டுள்ளது.

காணிகளின் விபரம்

1. வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக், வலிகாமம் மேற்குப்பகுதி, பண்டத்தெருப்பு கோயிற்பற்று, பண்டத்தெருப்பு இறை "கிழவி கலட்டி" (Kilavy Kaladdy) நிலப்பரப்பு $3\frac{1}{2}$ ஷை இறை நிலப்பரப்பு $4\frac{1}{2}$ மொத்தமாக நிலப்பரப்பு 8. வீடுகளும், கிணறும், செய்பயிர் வான்பயிர்களும், பனைகளும். எல்லை கிழக்கு சூசைப்பிள்ளை செபஸ்தியாம்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், வடக்கு ரேட்டு. மேற்கு எங்களுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். தெற்கு முருகர் கணபதிப்பிள்ளையின் ஆதனம். இதடங்கலிலும் சொரியலாக அரைப்பங்கும் மேற்கெல்லைக் காணியிலுள்ள கிணற்றில் இதற்குரிய பங்கும், வழமையான வழிவாய்க்கால் பாவிப்புரிமையும் யாழ்ப்பாணம் E. 243/110-ல் பதியப்பட்டுள்ளது,

பிரசித்த நொத்தாரிசு A. சின்னையாபிள்ளையால் எங்கள் பெற்றாரின் பேரில் முடிநத 26 ஆனி 1911 இல: 3110, 15 ஆடி 1913 இல: 4704 அறுதி உறுதிகளின்படி முதுசொமாகவும் ஆட்சியுரிமைப்படியும் எங்கட்குரிய காணி.

2, ஷை இறை,"பள்ளுவாட்டை" (Palluvaddai) நிலப்பரப்பு 8. எல்லை கிழக்கும் வடக்கும் அம்பலவாணர் பரமநாதபிள்ளைக்குரிய ஆதனம். மேற்கு நீக்கிலாப்பிள்ளை ஜேம்ஸின் ஆதனம். தெற்கு சின்னார் வயித்திலிங்கத்தின் ஆதனம், இதடங்கலிலும் சொரியலாக அரைப்பங்கும், வடக்கெல்லைக் காணியிலுள்ள கிணற்றில் பங்கும், வழிவாய்க்கால் பாவிப்புரிமையும், ஆனால் தெற்கெல்லைக்காணிக்கு தண்ணீர் இறைக்கவுள்ள வழிவாய்க்கால் தவிர யாழ்ப்பாணம் E. 235/33ல் பதியப்பட்டது,

பிரசித்த நொத்தாரிசு V. சீனிவாசகத்தால் 27 வைகாசி 1896-ல் இல: 5725-ல் காலஞ்சென்ற விசுவன் சுப்பன் கைம்பெண் நாச்சன் பேரில் முடிந்த அறுதி உறுதிப்படி எங்கட்கு பிதாவழி முதுசொமாகவும் ஆட்சி உரிமைப்படியும் உள்ள காணி,

சே. பாண்டித்துரை,
கொமிஷனர் விலைமதிப்பாளர்,
ஏலதாரர், தரகர்.
Commissioner of Sales,
Valuer Auctioneer & Broker.
மல்லாகம். 20-3-62.
M. 170 6-4-62.


யாழ்ப்பாணம்

## — ஐக்கிய இலாப நிதி —

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது, குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சவிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்' வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14.


## கோட்டு விற்பனவு விளம்பரம்

கோப்பாய் பீ. சுப்பிரமணியப்
கைம்பெண் கண்மலர்,
பதில் வழக்காளி
எதிராக
இல M, B. 3088
கொக்குவில் மேற்கு
நாகமுத்து செல்லத்துரை கைம்பெண் இரத்தினம் தானாகவும் தனது புருஷன் காலஞ்சென்ற நாகமுத்து செல்லத்துரையின் ஆஸ்திக்கு பிரதிகாரியஸ்தராகவும் —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M. B 3088-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் மூன்று துண்டுக்காணிகள் 1962ம் ஆண்டு மே (வைகாசி) மாதம் 5 ந் திகதி (5-5-62) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 1536-45ம், இதில் ரூபா 1000 க்கு 13-10-59 திகதி தொடக்கம் 2-2-60 திகதி வரைக்கும் 100 க்கு 9 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும்வரைககும் 100 க்கு 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபா 189-37 சதம்.

காணிகளின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர்க் கோவிற்பற்று கொக்குவில் மேற்கிறை "ஆலடியும் மறுபிரிவுகளும் நிலப்பரப்பு இரண்டு (2ம்) கல்வீடும் மற்றும் கட்டிடங்களும் எல்லை கிழக்கு பீ. இராசமணியின் ஆதனம். வடக்கு கைஒழுங்கை. மேற்கு ஒழுங்கை. தெற்கு எம். பாக்கியதததின் ஆதனம். இதில் கிணற்றில் பங்கும் தூர்வை வழிவாய்க்கால் புறநீங்கலாக மிதுதியடங்கலும்.

2 மேற்படி வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை மேற்கிறை. 'இத்திகூடலும் இத்திகூடல் பள்ளமும்" நிலப்பரப்பு ஆறு (6ம்) குளி 6ம் எல்லை கிழககு கை ஒழுங்கை. வடக்கு ரீ. நடராசாவின் ஆதனம். மேற்கு புதிதாக வைக்கப்பட்ட 13 குளி விஸ்த்தீரணமுள்ள கை ஒழுங்கை. தெற்கு D 205/217ல் பதியப்பட்ட காணி. இதடங்கலும் இன்னும் 13 குளி கை ஒழுங்கைப் பங்கும்.

3. மேற்படி வண்ணார்பண்ணை மேற்கிறை "இத்திக்கூடல்" நிலப்பரப்பு எட்டு (8ம்) எல்லைகிழக்கு ரீ. நடராசாவின் ஆதனம். வடக்கு ஒழுங்கை. மேற்கு தம்பிப்பிள்ளை பெண் சிவக்கொழுந்துவின் ஆதனம். தெற்கு கந்தையா செல்லத்துரைக்கும் நாகமுத்து செல்லத்துரைக்குமுரிய ஆதனம். இதில் சொரியலாய் மூன்றில் ஒருபங்கு($\frac{1}{3}$)

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Valuer,
Licensed Auctioneer
தெல்லிப்பழை, 23-2-1962.
M. 158 6-4-62

## அடைவு நகை ஏல விற்பனவு

—0—

பருத்தித்துறை தும்பளை, வடலிப்பாதியிலிருக்கும், அடைவு பிடிக்கும் ஸ்ரீமதி. நா. சிவப்பிரகாசம், & ஸ்ரீமதி. வே, வினாசித்தம்பி அவர்களிடம் 1958-ம் ஆண்டு தைமீ 1-ந்தேதி தொடக்கம் 1959-ம் ஆண்டு மார்கழிமீ 31-ந் தேதி முடியும் வரையும் உள்ள மீளாத நகைகள் யாவும் 1962-ம் ஆண்டு வைகாசிமீ 5-ம் தேதி (5-5-62) சனிக்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் மேற்படியார் கடையிலிருந்து என்னாற் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

கா. முத்துக்குமாருஐயர்,
வெந்தீஸ் மேஸ்தர்
&
விலைமதிப்பாளர்,
சந்நிதிவேல்
பருத்தித்துறை
2-4-1962.
M 1 6-4-62.



# காரைக்காலம்மையார் கடவுள் தன்மை

[24-3-62 சனிக்கிழமை சைவபரிபாலன சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் காரைக்காலம்மையார் குருபூசையில் சைவப்பிரசாரகர் திரு. பொன். அப்புக்குட்டி அவர்கள் செய்த விரிவுரையின் சாரம்]

காரைக்காலம்மையார் காரைக்காலில் வைசியர் குலத்தில் தனதத்தனுக்கு மகளாகப் பிறந்து சிவபக்தி யடியார் பக்தியில் மேம்பட்டு வளர்ந்தார். அவரின் பிள்ளைத் திருநாமம் புனிதவதியார். நாகபட்டணத்தில் தனவந்தரான நிதிபதி பரமதத்தனை விவாகம் செய்து மனையறம் புரிந்து "மண்ணினில் பிறந்தார் பெறும் பயன் அண்ணலார் அடியாரை அமுது செய்வித்தல்" என்று சிவபெருமானின் திருவடிகளில் பேரன்பு பெருக அடியார்களுக்கு அமுது படைத்து அவர்களுக்கு வேண்டிய பொன் வெள்ளி செழுந்துகில் முதலியன கொடுத்து வந்தார். ஒருநாள் பரமதத்தனைக் காண வந்தவர்கள் இரண்டு மாங்கனிகளை அவனுக்குக் கொடுத்தார், அவன் அவைகளை மனைவியிடம் அனுப்பிவிட்டான். ஓர் சிவனடியார் பசியுடன் வீட்டுக்கு வந்ததைக் கண்ட புனிதவதியார் அவருக்கு அமுது படைத்து கறியமுது ஆக்கப்பெறாமையால் கணவன் அனுப்பிய மாங்கனியொன்றை இட்டு அமுது செய்வித்தார். அடியார் புனிதவதியாரின் பெருங்குணத்தைப் பாராட்டிப்போயினர். பரமதத்தன் வீடுவந்து பகல் போசனம் செய்யும்போது புனிதவதியார் எஞ்சிய மாங்கனியைக் கணவனின் கலத்தில் படைத்தார். அவன் உண்டு கனியின் சுவை கண்டு இன்னமொன்றுண்டு அதையும் படையுங்கள் என்றான், புனிதவதியார் கொண்டுவரப் போகிறவர்போல் உள்ளே சென்று தம்மை நம்புகின்ற மெய்யடியார்களுக்கு உற்ற இடத்து உதவும் இறைவன் திருவடிகளைத் தியானித்தார். உடனே அவன்றிருவருளால் ஓர் மாங்கனி கிடைத்தது. உடனே அவர் கணவன் கலத்திலதையிட்டார், அவன் அதைப் புசித்து இது முன்னையதினும் கூடிய சுவையுடையது. இஃதை எங்கே பெற்றாய் என்றான், திருவருளின் பெருமையை மற்றவர்களுக்குப் புனிதவதியார் சொல்லக்கூடாதென்று சற்று யோசித்தார். கணவனுக்கு மறைத்துக்கூறாது நிகழ்ந்தவைகளைக் கூறினார் கேட்ட பரமதத்தன் மனம் தெளியாது அப்படியாயின் இறைவரது திருவருளால் இன்னுமொரு கனி அழைத்துக்கொடு பார்ப்போமென்றான். புனிதவதியார் உள்ளே சென்று இறைவனைத் துதித்து தேவரீர் இன்னுமொரு மாங்கனி தந்தருள வேண்டும் இல்லையேல் என் உரை பொய்யாய் முடியும் என்று பிரார்த்தித்தார் இறைவன் திருவருளால் மறறொரு மாங்கனியும் பெற்றார். அதை அவனிடம் கொண்டு வந்து கொடுக்க அவனதிசயித்து வாங்கினான். உடனே அக்கனி மறைந்துபோயிற்று அவன் அச்சத்தோடு உள்ளம் தடுமாறி அம்மையாரைத் தெய்வமாகக் கொண்டான். இனிமேலிங்கிவரை மனைவியாகக் கொண்டு பணிசெய்வித்தலாகாதென்றுதான் பிரிந்துவாழ வேண்டுமென்று துணிந்தான். வியாபாரம் செய்யவென்று கப்பலேறிப் போய் பொருளீட்டி பாண்டி நாட்டில் வைசியர் குலத்தில் வேறொரு பெண்ணை விவாகம் செய்து ஓர் பெண் குழந்தையைப்பெற்றெடுத்துத் தெய்வமாகக் கொண்ட தன் முன் மனைவி பெயராகிய புனிதவதி என்ற பெயரிட்டு வாழ்ந்துவந்தான். இதைக் கேள்வியுற்ற புனிதவதியின் சுற்றத்தார் அம்மையாரைப் பல்லக்கில் கொண்டுசென்று அயலில் தங்கி அவனுக்கு அறிவிக்க அவன்றனது இரண்டாம் மனைவியையும் குழந்தையையுமழைத்துவந்து அம்மையாரை வணங்குவித்துத் தானும் வணங்கி அச்சத்தோடு ஒடுங்கி நின்றான் சுற்றத்தார் இப்படி நீ செய்த காரணமென்னவென்று கேட்டனர். அவன்தான் அவரிடத்தில் பெரிய அற்புதத்தைக் கண்டதாகவும் அவர் தெய்வப் பெண்ணேயன்றி மானுடப் பெண்ணல்லவென்றும் அவர் வரலாறுகளைக்கூறி நீங்களுமவரை வணங்குங்கள் எனறான். சுற்றத்தார் அவன் கூறியவைகளைக்கேட்டுத்திகைத்து நின்றனர். புனிதவதியார் ஆண்டவன் திருவடிகளைச் சிந்தித்துச் சுவாமி என் கணவன் பொருட்டு யான் இதுவரை தாங்கியிருந்த உடல் வனப்பைஒழித்துதேவரீரைப் பக்கதில் நின்று தொழுகிற பேய்வடிவத்தைத்தரவேண்டுமென்று வணங்கினார் அவ்வாறே பெற்றார். அப்போது வானவர் மலர்மழை பொழிந்தார். உலகெல்லாம் வான துந்துபி ஒலித்தது, புனிதவதியார் தாம் பெற்றசிவ ஞானத் தொருமையால் அடியார் கூட்டத்தல் தாமுமொன்றுனார். அற்புதத் திருவந்தாதியும் திருவிரட்டை மணிமாலையும் (படிக்கப்படிக்கமொழிக்கு மொழி தித்திக்கும்) பாடித் துதித்துகயிலாயமலையின்கண் சிவபெருமானைத் தரிசிக்க அன்புடன் கடிதிற் சென்றார் கயிலைமலையைக் கிட்டிச் சேர்ந்து காலால் நடவாது தலையால் நடந்து சமீபத்தில் சென்று நின்றார்.

உமாதேவியார் கண்டு வியந்து எம்பெருமானை நோக்கி ஓர் எற்பின்யாக்கை யன்பென்னே பென்ன எம்பெருமான் இவள் நம்மைப்பேணுமம்மைகாண் என்றார். அருகுவந்து புனிதவதியாரனைய எம்பெருமான் நோக்கி அம்மையே என்றழைக்க அம்மையாரும் அப்பாவென்று அவரின் திருவடியை வணங்கி வீழ்ந்தெழுந்தார். எம்பெருமான் நம்பாலிங்கு வேண்டுவதென்னவென்றார் ஒரு காலுமழியாதவன்பும் இவ்வுலகத்தினில் இனிப்பிறவாதிருக்கவும் அப்படி வினைவசத்தால் பிறப்புண்டாயினும் தேவரீரை என்றும் மறவாதிருக்கவும் தேவரீர் ஆனந்தத்தாண்டவம் செய்யும் போது அடியேன் தேவரீரைப் பாடிக்கொண்டு திருவடியின் கீழிருக்கவும் அருளவேண்டுமென்று வணங்கினார்.

எம்பெருமான் அம்மையார் கேட்ட வரங்களைக்கொடுத்து திருவாலங்காட்டில் திருவடியைத் தூக்கி ஊர்த்த தாண்டவம் செய்தருளும் திருக்கோலத்தைத் தரிசித்துத் தம் திருவடிக்கீழ் என்றுமிருக்கும்வண்ணம் அருள்புரிந்தார். அம்மையார் இறைவரை வணங்கி விடைபெற்றுக்கொண்டு திருவாலங்காட்டுக்குத் தலையினால் நடந்து சென்று சிவபெருமான் செய்யும் ஊர்த்த தாண்டவத்தைத்தரிசித்து "கொங்கைதிரங்கி" என்றெடுதது மூத்ததிருப்பதிகத்தைப் பாடிப் போற்றி நண்ணும் நாளில் தாண்டவத்திருக்கோலத்தைத் தரிசித்துப் பேரன்பு மிகுதியினால் "எட்டியிலவமீகை" என்னும் திருப்பதிகத்தைப் பாடி இறைவன்றிருவடியின்கீழ் என்றும் பெறற்கரிய பேறு பெற்றிருக்கின்றார்,

— தொடரும்.

## சிவாத்துவிதம்

1-ம் பக்கத் தொடர்ச்சி

ஸ்ரீ தாயுமானவர் கூறிய சொற்றொடர் சமயங்களைக் குறிக்காது. தத்துவஞான நிலைகளைக் குறிப்பதாகுமென்பதும் அறியற்பாலதாம். எனவே "சைவ வேதாந்தம்" என்பதின் பொருள் சிவனை முழுமுதற் பொருளாக வழிபடும் வேதாந்தக் கொள்கையுடைய சைவம் என்பதாம். "வேதாந்தம்" என்பது சங்கரருடைய அத்துவிதக் கொள்கையையே குறிக்குமெனப் பலர் கருதுகின்றனர். அது தவறான கருத்தாகும். வேதாந்தத்தின் பிரிவுகளி லொன்றுதான் அத்துவித வேதாந்தம்",

முற்றிற்று.

## அவசரம் என்ன?



**வதந்தியார்:** அவசகாலநிலைமை இருந்தாற்போல எடுபடுமாமே...!

**வாயாடி:** அப்டி என்னஐயா அவசரம்!

## சிங்கப்பூர் ஸ்ரீசெண்பகவிநாயகர் ஆலய பரிபாலன சபையோர் தேர்தல்

1962-ம் ஆண்டு ஏப்பிரல் மீ 1-ந்திகதி நடந்த சிங்கப்பூர் இலங்கைத் தமிழர் சங்க வருடாந்தக் கூட்டத்தில், சிங்கப்பூர் ஸ்ரீ செண்பக விநாயகர் ஆலய பரிபாலனத்திற்குப் புதிய பரிபாலன சபை தேர்ந்து நியமிக்கப்பெற்றது.

திருவாளர் டாக்டர் ப, தில்லைநாதன் அவர்கள் தலைவராகவும், திருவாளர் க. சிவலிங்கம் அவர்கள் கௌரவ காரியதரிசியாகவும், திருவாளர் வீ. வி. சுந்தரம் அவர்கள் கௌரவ தனாதிகாரியாகவும் தெரிவுசெய்யப்பெற்றனர். திருவாளர் டாக்டர் ப, தில்லைநாதன் அவர்கள் முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேல், மேற்படி ஆலயத்திற்கு அரும் பணியாற்றி வருவது மிகவும் மகிழ்ச்சியுடன் குறிப்பிடத்தக்கதாகும், ——

## எழுதுவினைஞர் தேவை

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை காரியாலய அலுவல்களைப் பார்க்கவும், சிதம்பரம் புண்ணியநாச்சிமட தர்மங்களையும், சபைக்குரிய மூன்று ஆலயங்களையும் மேற்பார்வை செய்யவும் ஒரு எழுதுவினைஞர் தேவை. மனுப்பண்ணுபவர்கள் நடுத்தர வயதுள்ளவர்களாகவும் தமிழ் - ஆங்கில அறிவுள்ளவர்களாகவும், தட்டெழுத்தனுபவமுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும் மாத வேதனம் ரூபா. 60 தொடக்கம் ரூபா. 100 வரையில் அநுபவத்தையொட்டி வழங்கப்படும், யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபைக் காரியதரிசிக்கு 15-4-62க்கு முன் மனுப்பத்திரங்களை அனுப்ப வேண்டும்.

## நல்லைநகர் வயிரவர் பதிகம்

[நவாலியூர் ஸ்ரீ க, சோமசுந்தரப்புலவர் அவர்கள் பாடியது]

காப்பு

மூத்த பிள்ளையார்

வெண்பா

பத்தருறை நல்லைப் பழம்பதியின் வாழ்வுகந்த
முத்தனடி போற்றி மொழிதமிழ்க்குச் — சித்தி
புரிகருணை மும்மதத்துப் போதகத்தின் பாதம்
தரியுருகி நெஞ்சே தலை,

நூல்

சீர்கொண்ட [illegible]ால யத்தில்வரு வடவையுந்
திகழ்வடவை முகமுமிழ்ந்த
திங்களுநம போலவளர் செஞ்சடையு மச்சடைச்
சீதளத் தருணமதியும்
ஏர்கொண்ட வருணகிர ணக்கருணை முகமுமங்
கெழுகின்ற புன்சிரிப்பும்
இமையாத முக்கண்ணு நாறபுயமு மப்புயத்
தேந்துதம ருகபாசமும்
கூர்கொண்ட திரிசூல முங்கபா லமுமடியர்
கொடுவினை கெடுக்குமடியும்
கூறுஞ்சு வானவா கனமுமா யானந்த
கோலாக லக்கோமள
வார்கொண்ட ஞானவடி வங்கண்டு கொள்ள நீ
வரவேணு நல்லைநகர்வாழ்
மாதவர்க் கனுகூல வேதுகேத் திரபால
வடுகவயி ரவமூர்த்தியே.

நேயர்கள் நெஞ்சம்

## இந்திய இசையாளர் வருகை

இந்திய இசையாளர்கள் இலங்கைக்கு வருவதினால் இலங்கை இசையாளர்களின் வருமானம் குறைவதாகவும், இலங்கை இசையாளர்கள் இசையின் தரம் குறைகிறதென்றும், ஆதலின் வெளிநாட்டு இசையாளர்கள் வருகையைத் தடை செய்ய வேண்டும் என்றும் இசையாளர்கள் சிலர் அரசாங்கத்தைக் கேட்டுள்ளனர். இது பிற்போக்கான நோக்கமாகும்

இலங்கையிலே பூரண சங்கீத ஞானமுள்ள நாதஸ்வர தவில் வித்துவான்கள் விரல் விட்டு எண்ணத்தக்க வகையிலேயே இருக்கிறார்கள். இவர்கள்கூட இந்திய இசையாளர்களின் வருகையாலும், தாம் இந்தியாவிலேயே போய், தம் இசைத் திறமையைக் காட்டச்சந்தர்ப்பம் ஏற்பட்டமையாலுமே புகழ்பெற்றனர் என்றால் மிகையாகாது,

இலங்கையின் பல பாகங்களிலும் திருவிழாக்கள் ஆரம்பமாகும் காலமிது. இவற்றைவிட வீடுகளில் திருமண விழாக்கள், புதுமனைப்பிரவேச விழாக்களும் நடைபெறும். இவற்றுக்கெல்லாம் சேவிக்கக்கூடிய அளவுக்குப் போதிய வித்துவான்கள் நம் நாட்டிலே இல்லையென்றே கூறலாம். இந்திய இசையாளர்கள் வராதுவிட்டால் இங்கேயுள்ள வித்துவான்கள் ஒவ்வொரு கச்சேரிக்கும் சலாராக பல நூறு ரூபாய்கள் கேட்பார்கள். இது பொது மக்களையும் இசைப்பிரியர்களையும் பாதிக்கக்கூடும்.

அயல்நாட்டு இசையாளர்கள் பல்லாண்டு காலமாகவே நம் நாட்டுக்குவந்து இசையை வாரிவழங்கினர்கள். அயல்நாட்டு வித்துவான்கள் வந்தால் அவர்களுக்குத் தாம் எவ்வகையாலும் குறைந்தவர்களல்லர் என்பதைக் காட்டும் சந்தர்ப்பம் உள்நாட்டு வித்துவான்களுக்கு ஏற்படும். இதனால் இலங்கையின் இசைக்கலை வளருமேயன்றி எவ்வாற்றானும் சிதைந்துவிடாது. நம் நாட்டுத தவில் வித்துவான் இணுவில் வி தட்சணாமூர்த்தி அவர்களைச் சென்னைத் தமிழிசைச் சங்கம் அழைத்துக் கௌரவித்த செய்தியை நாம் மறந்துவிடலாமா? எனவே இந்திய நாதஸ்வர தவில் வித்துவான்களைக் கௌரவிக்க வேண்டிய நாம், கௌரவிக்காமல் விட்டாலும்கூடக் காரியமில்லை. அவர்கள் வருகையைத் தடைசெய்ய வேண்டுமென்று கேட்கலாமா?

பழம் பெரும் வித்துவானாகிய மாவிட்டபுரம் இராசா அவர்கள் தராதரமுள்ள நாதஸ்வர தவில் வித்துவான்களை அழைப்பதில் தவறில்லையென்று பத்திரிகை வாயிலாகத் தமது கருத்தை வெளியிட்டிருப்பது வரவேற்கத் தக்கதாகும். இசைக்கலைக்கு தன் நாடு, பிறநாடு என்று பேதம் பாராட்டவேண்டியதில்லை. இசைக்கலைஞர்கள் எங்கெங்கு அதிகமாகக் கூடுகின்றார்களோ அங்கெல்லாம் தெய்வ இசைக்கலை வளரும் என்பதில் ஐயமே இல்லை. காலஞ்சென்ற நாதஸ்வர மேதை எஸ் பி. எம். திருநாவுக்கரசுபிள்ளையும் இந்தியாவில் இருந்து வந்த வித்துவான்தானே!

அ. பஞ்சாட்சரம்.
உரும்பராய்
20-3-62.

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் பிறவுண்வீதி, 2ம் ஒழுங்கை, 2ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 6-4-1962 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
ஆசிரியர்; நம. சிவப்பிரகாசம்